உ

ஔவையார் அருளிச்செய்த

# விநாயகரகவல்.

வேழமுகம்-உலகநீதி

1173



பூமகள்விலாச அச்சுயந்திரசாலையிற்
பதிப்பிக்கப்பட்டது. 1902.

THANJAVUR MAHARAJA SERFOJI'S
SARASVATI

உ

கடவுள் துணை.

ஔவையாரருளிச்செய்த

# விநாயகரகவல்.

—(*)—

## வரலாறு.

சுந்தரமூர்த்தி நாயனருடனே கைலாயத்துக்குப்பரமசிவனுடைய சந்நிதானத்தில் ஆதியுலா அரங்கேற்ற எழுந்தருளுகின்ற சேரமான்பெருமாணயனர் ஔவையாரையழையாமல் வந்துவிட்டோமேயென்று நினைத்தார். அதுவிநாயகரைப் பூசித்துக்கொண்டிருந்த ஔவையாருக்குத்தெரிந்து தானுமவர்களுடனே கைலாயத்திற்குப் போகவேண்டும் என்கிற விருப்பங்கொண்டு துரிதமாகப் பூசைசெய்தாள் விநாயகர் ஔவையே நீ சாவதானமாகப் பூசைசெய் அவர்களுக்கு முன்னுதாகவே நீபோய்ச்சேரும்படிச் செய்வேனென்றார் அப்படியே ஔவையார் துரிதமில்லாமற் பூசைசெய்து இந்த அகவலைத் தோத்திரமாகப்பாடினுள் அப்போது விநாயகர் தாஞ்சொன்னபடி ஔவையாரைக்கைலாயத்திற் சேர்த்தார் பின்புவந்த சேரமான் பெருமாநாயனரைப்பார்த்து ஔவையார் சொன்ன

### கட்டளைக்கலித்துறை.

மதுரமொழிநல் லுமைபாளபுதல்வன் மலர்பதத்
தை, முதிரநினையவல்லார்க்கரிதோ முகில்போன்மு

ழங்கி, யதிரநடந்திடும யானையுந்தேரு மதன்பின் வருங், குதிரையுங்காதங் கிழவியுங்காதங் குலம ன்னனே.

## விநாயகரைப் பூஜிக்கும் மந்திரம்,

சுமுகாயநமா, ஏகதந்தாயநமா, கபிலாயநமா, கஜகர்ணிகாயநமா, லம்போதராயநமா, விகடாய நமா, விக்னராஜாயநமா, கணாதிபதியேநமா, தூம கேதுவேநமா, கணாதியக்ஷாயநமா, பாலசந்திராய நமா, கஜாநநாயநமா, வக்கிரதுண்டாயநமா, சூர்ப்ப கர்ணாயநமா, ஹேரம்பாயநமா ஸ்கந்தபூர்வஜாயநமா.

## சுலோகம்.

மூஷிகவாஹன மோதகஹஸ்த, சாமரகர்ந வி ளம்பிதசூத்ர, வாமனரூபமஹேஸ்வரபுத்ர, விக்னவி நாயக பாதநமஸ்தே.

## விநாயகர் அகவல்,

சீதக்களபச் செந்தாமரைப்பூம்
பாதச்சிலம்பும் பலவிசைபாடப்
பொன்னரைஞாணும பூந்துகிலாடையும்
வன்னமருங்கில் வளர்ந்தெழுதெறிப்பப்
பேழைவயிறும் பெரும்பாரக்கோடும்
வேழமுகமும் விளங்குசிந்தூரமும்
ஐந்துகரமும் அங்குசபாசமும்
நெஞ்சிற்குடிகொண்ட நீலமேனியும்
நான்றவாயும் நாலிருபுயமும்

மூன்றுகண்ணும் மும்மதச்சுவடும்
இரண்டுசெவியும் இலங்குபொன்முடியும்
திரண்டமுப்புரிநூல் திகழொளிமார்பும்
அற்புதநின்ற கற்பகக்களிறே
முப்பழநுகரும் மூஷிகவாஹன
இப்பொழுதென்னை யாட்கொளவேண்டித்
தாயாயெனக்குத் தானெழுந்தருளி
மாயாப்பிறவி மயக்கமறுத்துத்
திருந்தியமுதலைந் தெழுத்துந்தெளிவாய்ப்
பொருந்தவேவந்தென் னுளந்தனிற்புகுந்து
குருவடிவாகிக் குவலயந்தன்னிற்
திருவடிவைத்துத் திறமிதுபொருளென
வாடாவகைதான் மகிழ்ந்தெனக்கருளிக்
கோடாயுதத்தாற் கொடுவினைகளைந்தே
உவட்டாவுபதேசம் புகட்டியென்செவியிற்
றெவிட்டாதஞானத் தெளிவையுங்காட்டி
ஐம்புலன்றன்னை யடக்குமுபாயம்
இன்புறுகருணை இனிதெனக்கருளிக்
கருவிகளொடுங்குங் கருத்தினையறிவித்
திருவினைதன்னை அறுத்திருள்கடிந்து
தலமொருநான்குந் தந்தெனக்கருளி
மலமொருமூன்றின் மயக்கமறுத்தே
ஒன்பதுவாயில் ஒருமந்திரத்தால்
ஐம்புலக்கதவை அடைப்பதுங்காட்டி

ஆறுதாரத் தங்குசநிலையும்
பேறுநிறுத்திப் பேச்சுரையறுத்தே
இடைபிங்கலையின் எழுத்தறிவித்துக்
கடையிற்சுழிமுனைக் கபாலமுங்காட்டி
மூன்றுமண்டலத்தின் முட்டியதூணின்
நான்றெழுபாம்பி னாவிலுணர்த்திக்
குண்டலியதனிற் கூடியவசபை
விண்டெழுமந்திரம் வெளிப்படவுரைத்து
மூலாதாரத்தின் மூண்டெழுகனலைக்
காலாலெழுப்புங் கருத்தறிவித்தே
அமுதநிலையும் ஆதித்தனியக்கமும்
குமுதசகாயன் குணத்தையுங்கூறி
இடைச்சக்கரத்தின் ஈரெட்டுநிலையும்
உடற்சக்கரத்தி னுறுப்பையுங்காட்டிச்
சண்முகதூலமுஞ் சதுர்முகசூட்சமும்
எண்முகமாக வினிதெனக்கருளிப்
புரியட்டகாயம் புலப்படவெனக்குத்
தெரியெட்டுநிலையுந் தெரிசனப்படுத்திக்
கருத்தினிற்கபால வாயில்காட்டி
இருத்திமுத்தி இனிதெனக்கருளி
என்னையறிவித் தெனக்கருள்செய்து
முன்னைவினையின் முதலைக்களைந்து
வாக்குமனமு மில்லாமனோலயம்
தேக்கியேயென்றென் சிந்தைதெளிவித்

திருள்வெளியிரண்டும் ஒன்றிடமென்ன
அருடருமானந்தத் தழுத்தியென்செவியில்
எல்லையில்லா வானந்தமளித்
தல்லல்களைந்தே யருள்வழிகாட்டிச்
சத்தத்தினுள்ளே சதாசிவங்காட்டிச்
சித்தத்தினுள்ளே சிவலிங்கங்காட்டி
அணுவிற்கணுவா யப்பாலுக்கப்பாலாய்
கணுமுற்றிநின்ற கரும்புள்ளேகாட்டி
வேடமுநீறும் விளங்கநிறுத்திக்
கூடுமெய்த்தொண்டர் குழாத்துடன்கூட்டி
யஞ்சக்கரத்தி னருமபொருடன்னை
நெஞ்சக்கருத்தி னிலையறிவித்துத்
தத்துவநிலையைத் தந்தெனையாண்ட
வித்தகவிநாயக விரைகழல்சரணே.

விநாயகரகவல் முற்றிற்று.

சுக்லாம்பரதரம்விஷ்ணும்சசிவர்ணம்சதுர்ப்புஜம்
ப்ரசன்னவதனம்தியாயேஸர்வவிக்னோபசாந்தயே.

# வேழமுகம்.

காப்பு.

வேழமுகத்து விநாயகனைத்தொழ
வாழ்வுமிகுத்து வரும்
வெள்ளைக்கொம்பன் விநாயகனைத்தொழ
துள்ளியோடுந் தொடர்ந்தவினைகளே

## பிள்ளையார்சிந்தனை அகவல்,

சிந்தித்தவர்க்கருள் கணபதிஜெயஜெய
சீரியவானைக் கன்றேஜெயஜெய
அன்புடையமரர்கட் காப்பாய்ஜெயஜெய
ஆவித்துணையே கணபதிஜெயஜெய
இண்டைச்சடைமுடி யிறைவாஜெயஜெய
ஈசன்றந்தருள் மகனேஜெயஜெய
உன்னியகரும முடிப்பாய்ஜெயஜெய
ஊர்நவசந்தி யுகந்தாஜெயஜெய
எம்பெருமானே யிறைவாஜெயஜெய
ஏழுலகுந்தொழ நின்றாய்ஜெயஜெய
ஐயாகணபதி நம்பியேஜெயஜெய
ஒத்தைமருப்புடை வித்தகாஜெயஜெய
ஓங்கியவானைக் கன்றேஜெயஜெய
ஔவியமில்லா வருளேஜெயஜெய
அஃரவஸ்து வானவாஜெயஜெய
கணபதியென்வினை களைவாய்ஜெயஜெய
ஙப்போர்மழுவோன் றேந்தியஜெயஜெய
சங்கரன்மகனே சதுராஜெயஜெய
ஞயநம்பினர்பா லாடியஜெயஜெய
இடம்படுவிக்கின விநாயகாஜெயஜெய
இணங்கியபிள்ளைகள் தலைவாஜெயஜெய
தத்துவமறைதெரி வித்தகாஜெயஜெய
நன்னெறிவிக்கின விநாயகாஜெயஜெய

பள்ளியிலுறைதரும் பிள்ளாய்ஜெயஜெய
மன்றுளாடும் மணியேஜெயஜெய
இனங்கியஞானக் குன்றேஜெயஜெய
அரவக்கிண்கிணி யார்ப்பாய்ஜெயஜெய
இலவக்கொம்பள் தேந்தியஜெயஜெய
வஞ்சனைபலவும் தீர்ப்பாய்ஜெயஜெய
அழகியவானைக் கன்றேஜெயஜெய
இளமதயானை முகத்தாய்ஜெயஜெய
இரகுபதிவிக்கின விநாயகாஜெயஜெய
அனந்தலோடாதியி லடிதொழவருளே.

பிள்ளையார்சிந்தனை-முற்றிற்று.

## சரஸ்வதிசிந்தனை,

புத்தகத்துள்ளுறைமாதே
பூவிலமர்ந்துறைவாழ்வே
வித்தகப்பெண்பிள்ளைநங்காய்
வேதப்பொருளுக்கிறைவி
முத்தின்குடையுடையாளே
மூவுலகுந்தொழுதேவி
செப்புகவித்தனமுலையாய்
செவ்வரியோடியகண்ணும்
முத்துநிரைத்தவெண்பல்லாய்
முருக்கம்பூமேனிநிறத்தாளே
தக்கோலந்தின்றதுவர்வாயாய்
சரஸ்வதியென்னுந்திருவே

எக்காலுமுன்னைத்தொழுவோம்
எழுத்தறிபுத்திபண்ணிவிப்பாய்
ஆக்காயெம்பெருமாட்டி
அழகியபூவண்ணமீதே
நோக்காயென்மிடிதீர
நொடிக்கும்பிராமணத்தினேக்காயே
சாலுநெல்லரிசிகொண்டு
சரஸ்வதிபூசைபண்ணி
பாலொடுபழத்தைநிறைப்பி
பராவித்தொழுவோம்நங்காய்
நங்காய்நங்காய்நமஸ்து
ஞானக்கொழுந்தேநமஸ்து
கல்விக்கரசேநமஸ்து
கணக்கறிதேவிநமஸ்து
சொல்லும்பொருளேநமஸ்து
சூட்சமரூபிநமஸ்து

சரஸ்வதிசிந்தனை - முற்றிற்று.

## பள்ளியிற்பிள்ளையார்சிந்தனை

எள்ளுபொரித்தபொரியும்
இடித்தவல்தன்னிற்கலந்து
வள்ளிக்கிழங்கைத்திருத்தி
வாழைப்பழத்தையுரித்து
உள்ளியபாகுந்திரட்டி
உண்ணும்படியேதருவோம்

கள்ளத்திருமால்மருகா
கணபதிசப்பாணிகொட்டாயே
ஆறுதேங்காயவல்தூணி
அதற்குத்தகுந்தவெள்ளுருண்டை
நூறுகுடலைமாம்பழம்
நொடிக்குமளவிலமுதுசெய்ய
வல்லபிள்ளாய்
ஆடாய்பாடாய்சங்கீதம்
அடியேன்காணநின்றாடாயே
சண்டுப்பெருச்சாளியேறி
சடுகுடுவென்னவுலாவி
இண்டையிளம்பிறைசாய
இணங்கியக்கொம்புவிரண்டுத
அண்டத்தமரர்துதிக்க
அடைக்கலங்காத்தடிரானே
குண்டைக்கணபதிநம்பி
குடங்கையாற்சப்பாணிகொட்டாயே
பொழுதுவிடிந்ததுபொழுது
போய்த்திருமலைமேலேறவேண்டும்
ஏறிமலர்ந்தபூக்கொய்யவேண்டும்
கொய்துதிருமுடிசாத்தவேண்டும்
சாத்திகைகட்டிநிற்கவேண்டும்
நின்றுதிருவிளக்கேற்றவேண்டும்
ஏற்றியரகராவென்னவேண்டும்

ஐயாக்கணபதிநம்பி
ஆயிரநாமமுடையாய்
பொய்யில்லா மெய்யுரைப்பாய்
போனதெல்லாந்தருவாய்
வெள்ளித்தாலம்பூசிவைத்து
வேண்டும்படியேயிட்டுண்டு
பள்ளிக்கேற்கநடவாய்
பாக்கியஞ்செய்தபிள்ளாய்
பிள்ளாய்பிள்ளாய்பேருடையாய்
பிரமனென்னும்பேருடையீர்
பிள்ளைகள்தங்கள்பிரானாரே
இருந்திரேபிரானாரே
எங்கள்மனதுகலங்காதே
பள்ளித்தடுக்குங்கையேடும்
படிக்குஞ்சுவடியைப்பரிங்தெடுத்துத்
துள்ளித்திரியுங்கால்தன்னைச்
சுகமேநிறுத்தும்பிரானாரே
ஓடாதேதளியாதே
பாடாதேபதுங்காதே
இட்டதேசோறும் பெற்றதேகறியும்
உண்டுதூங்கி பூசைமுடித்து
வெள்ளிமுளைக்கப் பள்ளிக்குவாரும்
பள்ளியிற்பிள்ளையார்சிந்தனை

முற்றிற்று.

## உலகநீதி.

### காப்பு.

உலகநீதி புராணத்தை யுரைக்கவே
கலைகளாய் வருங் கரிமுகன்காப்பு.

ஓதாமலொருநாளு மிருக்கவேண்டாம்
ஒருவரையும்பொல்லாங்குசொல்லவேண்டாம்
மாதாவையொருநாளும்மறக்கவேண்டாம்
வஞ்சனைகள்செய்வாரோடிணங்கவேண்டாம்
போகாதவிடந்தனிலேபோகவேண்டாம்
போகவிட்டுப்புறஞ்சொல்லித்திரியவேண்டாம்
வாதாடுங்குறவரிடவள்ளிபங்கன்
மயிலேறும்பெருமானை வாழ்த்தாய்நெஞ்சே (க)

நெஞ்சாரப்பொய்தன்னைச் சொல்லவேண்டாம்
நிலையில்லாகாரியத்தை நிறுத்தவேண்டாம்
நஞ்சுடனேயொருநாளும் பழகவேண்டாம்
நல்லிணக்கமில்லாரோ டிணங்கவேண்டாம்
அஞ்சாமற்றனிவழியே போகவேண்டாம்
அடுத்தவரையொருநாளுங் கெடுக்கவேண்டாம்
மஞ்சாறுங்குறவரிட வள்ளிபங்கன்
மயிலேறும்பெருமானை வாழ்த்தாய்நெஞ்சே (உ)

மனம்போனபோக்கெல்லாம் போகவேண்டாம்
மாற்றானைபுறவென்று நம்பவேண்டாம்

தனந்தேடியுண்ணுமற் புதைக்கவேண்டாம்
தருமத்தையொருநாளு மறக்கவேண்டாம்
சினந்தேடியல்லலையுந் தேடவேண்டாம்
சினத்திருந்தார்வாசல்வழி சேரவேண்டாம்
வனந்தேடுங்குறவரிட வள்ளிபங்கன்
மயிலேறும்பெருமாளை வாழ்த்தாய்நெஞ்சே(௩)

குற்றமென்றும்பாராட்டி திரியவேண்டாம்
கொலைகளவுசெய்வாரோ டிணங்கவேண்டாம்
கற்றவரையொருநாளும் பழிக்கவேண்டாம்
கற்புடையமங்கையரைக் கருதவேண்டாம்
கொற்றவனோடெதிர்மாறு பேசவேண்டாம்
கோயிலில்லாவூரில் குடியிருக்கவேண்டாம்
மற்றுநிகரொவ்வாத வள்ளிபங்கன்
மயிலேறும்பெருமாளை வாழ்த்தாய்நெஞ்சே(௪)

வாழாமற்பெண்ணைவைத்துத் திரியவேண்டாம்
மனையாளைகுற்றமென்றுஞ் சொல்லவேண்டாம்
வீழாதபடுகுழியில் வீழவேண்டாம்
வெஞ்சமரிற்புறங்கொடுத்து மீளவேண்டாம்
தாழ்வானகுலத்துடனே சேரவேண்டாம்
தாழ்ந்தவரைப்பொல்லாங்கு சொல்லவேண்டா
வாழ்வாருங்குறவரிட வள்ளிபங்கன் (ம்
மயிலேறும்பெருமாளை வாழ்த்தாய்நெஞ்சே(௫)

வார்த்தைசொல்வார்வாய்பார்த்து திரியவேண்டா
மதியாதார்தலைவாசல் மிதிக்கவேண்டாம் (ம்
மூத்தோர்சொல்வார்த்தைதனை மறக்கவேண்டாம்
முன்கோபக்காரரோ டிணங்கவேண்டாம்
வாத்தியார்கூலியை வைத்திருக்கவேண்டாம்
வழிபறித்துத்திரிவாரோ டிணங்கவேண்டாம்
சேர்ந்தபுகழானதொரு வள்ளிபங்கன்
மயிலேறும்பெருமாளை வாழ்த்தாய்நெஞ்சே (௬)

கருதாமற்கருமங்கள் முடிக்கவேண்டாம்
கணக்கழிவையொருநாளும் பேசவேண்டாம்
பொருவார்தம்போர்க்களத்திற் போகவேண்டாம்
பொதுநிலத்திலொருநாளுமிருக்கவேண்டாம்
இருதாரமொருநாளுந்தேடவேண்டாம்
எளியாரையெதிரிட்டுக்கொள்ளவேண்டாம்
குருகாரும்புனங்காக்குமேழைபங்கன்
குமரவேள்பாதத்தைக்கூறாய்நெஞ்சே (௭)

சேராதவிடந்தனிலேசேரவேண்டாம்
செய்தநன்றியொருநாளுமறக்கவேண்டாம்
ஊரோடுங்குண்டுணியாய்த் திரியவேண்டாம்
உற்றாரைவுதாசினஞ் சொல்லவேண்டாம்
பேறானகாரியத்தைத்தவிர்க்கவேண்டாம்
பிணைபட்டுத்துணைப்போகித் திரியவேண்டாம்
வாதாடுங்குறவரிட வள்ளிபங்கன்
மயிலேறும்பெருமாளை வாழ்த்தாய்நெஞ்சே (௮)

மனஞ்சலித்துத்திடுக்கிட்டுத் திரியவேண்டாம்
கண்ணழிவுசெய்து துயர் காட்டவேண்டாம்
காணாதவார்த்தைகளைக் கட்டுரைக்கவேண்டாம்
புண்படவேவார்த்தைதனைச் சொல்லவேண்டாம்
புறஞ்சொல்லித்திரிவாரோ டிணங்கவேண்டாம்
மண்ணளந்தார்மருமகனார் மைந்தனெங்கோன்
மயிலேறும்பெருமாளை வாழ்த்தாய்நெஞ்சே (௯)

மறம்பேசித்திரிவாரோ டிணங்கவேண்டாம்
வாதாடிவழக்குரைத்துச் சொல்லவேண்டாம்
திறம்பேசிக்கலகமிட்டுத் திரியவேண்டாம்
தெய்வத்தையொருநாளு மறக்கவேண்டாம்
இறந்தாலும்பொய்தன்னைச் சொல்லவேண்டாம்
ஏசலிட்டவுற்றாரை நத்தவேண்டாம்
குலந்தனிலேவாழ்கின்ற வள்ளிபங்கன்
குமரவேணாமத்தைக் கூறாய்நெஞ்சே. (௰)

அஞ்சுபேர்கூலியைக் கைக்கொள்ளவேண்டாம்
அதுவேது தம்பிரான் சொல்லக்கேளு
தஞ்சமுடன்வண்ணா னாவிதன்கூலி
சகலகலையோதிவைத்த வாத்தியார்கூலி
வஞ்சமுடனஞ்சறுத்த மருத்துவச்சிகூலி
மகாநோவுதான்தீர்த்த பண்டிதன்கூலி
இஞ்சொலுடனிவர்கூலி கொடாதபேரை
ஏதேதுசெய்வானோ யேமன்தானே. (௰௧)

கூறுக்கியொருகுடியைக்கெடுக்கவேண்டாம்
கொண்டைமேற்பூத்தேடி முடிக்கவேண்டாம்
தூராக்கித்தலையிட்டுத் திரியவேண்டாம்
துர்ச்சனராய்த்திரிவாரோ டிணங்கவேண்டாம்
வீரானதெய்வத்தை வெறுக்கவேண்டாம்
வெற்றியுள்ளபெரியோரை யிகழவேண்டாம்
மாறுனகுறவரிட வள்ளிபங்கன்
மயிலேறும்பெருமானை வாழ்த்தாய்நெஞ்சே. (௰௨

ஆதரித்துப்பலவகையாய்ப் பொருளுந்தேடி
அருந்தமிழாலறுமுகனைப் பாடவேண்டும்
ஓதுவித்தவாசகத்தா லுலகநாதன்
உண்மையாய்ப்பாடிவைத்த உலகநீதி
காதலித்துகற்றோருங் கேட்டபேருங்
கருத்துடனேநாள்தோறுங் களிப்பினோடு
போதமுற்றுமிகவாழ்ந்து பொருளுந்தேடி
பூலோகமுள்ளளவும் வாழ்வார்தாமே. (௰௩

உலகநீதி - முற்றுப்பெற்றது.

—(*)—

சென்னபட்டணம் பெத்துநாயக்கன்பேட்டை
திருப்பளிவீதி 21-வது-நெம்பர் வீடு.